# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1983 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, புதினத்தாள் (திருத்தச்) சட்டம்

---

*[1983, ஓகத்து மாதம் 10 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983, ஓகத்து மாதம் 12 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 35* *தபாற் செலவு : சதம் 50*

## 1983 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, புதினத்தாள் (திருத்தச்) சட்டம்

[1983, ஓகத்து மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 120/78
1170

### புதினத்தாள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1983 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, புதினத்தாள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும் புதினத்தாள் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவு, "அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓராண்டுக்கு மேற்படாததொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு, அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்" என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக "அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டாண்டுகளுக்கு மேற்படாததொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு, அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்" என்ற சொல்லமைப்பை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. 180 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, "அத்தகைய ஏதேனும் விடயத்தில் தவறு புரிகின்ற ஆள் ஒவ்வொருவருக்கும் அத்தவறுக்கெனக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் புரியப்பட்ட அத்தகைய செயல் ஒவ்வொன்றுக்கும், அத்தகைய ஏதேனும் புதினத்தாள் அச்சிடப்படும் அல்லது வெளியிடப்படும் ஒவ்வொரு நாளுக்கும், அவர் ஐந்நூறு ரூபாக் கொண்ட பணத்தொகையைப் பறிமுதலாகக் கொடுத்தல் வேண்டும்" என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக "அத்தகைய ஏதேனும் விடயத்தில் தவறு புரிகின்ற ஆள் ஒவ்வொருவருக்கும் அத்தவறுக்கெனக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் புரியப்பட்ட அத்தகைய செயல் ஒவ்வொன்றுக்கும், அத்தகைய ஏதேனும் புதினத்தாள் அச்சிடப்படும் அல்லது வெளியிடப்படும் ஒவ்வொரு நாளுக்கும், அவர் ஈராயிரத்து ஐந்நூறு ரூபாக் கொண்ட பணத்தொகையைப் பறிமுதலாகக் கொடுத்தல் வேண்டும்" என்ற சொல்லமைப்பை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2—சீ 70841—3,475 (83/06)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, "அத்தகைய ஆள் ஒவ்வொருவருக்கும் அத்தவறுக்கெனக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் அத்தகைய தவறு எதற்கும், தவறு ஒவ்வொன்றுக்கும், அவர் இருநூறு ரூபாக் கொண்ட பணத்தொகையைப் பறிமுதலாகக் கொடுத்தல் வேண்டும்" என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக "அத்தகைய ஆள் ஒவ்வொருவருக்கும் அத்தவறுக்கெனக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் அத்தகைய தவறு எதற்கும், தவறு ஒவ்வொன்றுக்கும், அவர் ஆயிரம் ரூபாக் கொண்ட பணத்தொகையைப் பறிமுதலாகக் கொடுத்தல் வேண்டும்" என்ற சொல்லமைப்பை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தாறும் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அத்துடன், மேற்சொல்லப்பட்டவாறாக ஒப்பமிடப்பட்ட அத்தகைய பிரதியை அல்லது பிரதிகளை இதனகத்துமுன்னர் பணிக்கப்பட்ட முறையில் ஒப்படைப்பதற்கு அல்லது ஒப்படைப்பிப்பதற்கு அசட்டையாகவிருக்கின்ற அத்தகைய புதினத்தாளின் அச்சீட்டாளர், வெளியீட்டாளர் ஆகிய ஒவ்வொருவருக்கும் அத்தவறுக்கெனக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், அவர் அத்தகைய அசட்டை ஒவ்வொன்றுக்கும் இருநூறு ரூபாக் கொண்ட பணத்தொகையைப் பறிமுதலாகக் கொடுத்தல் வேண்டும்" என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக "அத்துடன், மேற்சொல்லப்பட்டவாறாக ஒப்பமிடப்பட்ட அத்தகைய பிரதியை அல்லது பிரதிகளை இதனகத்துமுன்னர் பணிக்கப்பட்ட முறையில் ஒப்படைப்பதற்கு அல்லது ஒப்படைப்பிப்பதற்கு அசட்டையாகவிருக்கின்ற அத்தகைய புதினத்தாளின் அச்சீட்டாளர், வெளியீட்டாளர் ஆகிய ஒவ்வொருவருக்கும் அத்தவறுக்கெனக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், அவர் அத்தகைய அசட்டை ஒவ்வொன்றுக்கும் அத்தகைய அசட்டை புரியப்பட்ட முதலாவது வாரத்தின்போது ஆயிரம் ரூபாக் கொண்ட பணத்தொகையையும் அதன் பின்னரான ஒவ்வொரு நாளுக்கும் இருநூறு ரூபாக் கொண்ட மேலதிக பணத்தொகையையும் பறிமுதலாகக் கொடுத்தல் வேண்டும்" என்ற சொல்லமைப்பை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.